


**15.04.2025**

## தலைப்பு செய்திகள்

**1.** 2023ஆம் ஆண்டு பிரிவை சேர்ந்த IAS பயிற்சி அதிகாரிகளுடன் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று உரையாற்றுகிறார்.

**2.** நாட்டு மக்களின் சுகாதாரத்திற்கு மருத்துவ கல்வி வழிகோலுவதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

**3.** மாநிலங்களின் நியாயமான உரிமைகளை பாதுகாக்க உயர்நிலை குழு அமைப்பதற்கான தீர்மானத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

**4.** சட்டப்பேரவையில் இருந்து அஇஅதிமுக மற்றும் பிஜேபி உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.

**5.** உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டிகள் பெருவில் இன்று தொடங்குகின்றன.

## இனி விரிவான செய்திகள்

### குடியரசு தலைவர்

2023ஆம் ஆண்டு பிரிவை சேர்ந்த IAS அதிகாரிகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு குடியரசு தலைவர் மாளிகையில் இன்று சந்தித்து கலந்துரையாடுகிறார்.

வளர்ச்சி அடைந்த பாரத இலக்கை எட்டுவதற்கான இலக்குகள், குறிக்கோள்கள் குறித்து குடியரசு தலைவர் இளம் பயிற்சி அதிகாரிகளிடையே எடுத்துரைக்க உள்ளார்.

**********

### பிரதமர் வாழ்த்து

ஹிமாச்சல பிரதேச தினத்தை ஒட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி அம்மாநில மக்களுக்கு உளம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

வளமான கலாச்சாரத்துடன் கடின உழைப்பு, வீரம், துணிச்சல், திறமை போன்றவற்றில் பெயர்பெற்றுள்ள இம்மாநில மக்கள் மகிழ்ச்சியுடனும், வளத்துடனும் நலத்துடனும் வாழ பிரதமர் வாழ்த்தியுள்ளார்.

**********

### ஜே.பி.நட்டா

அனைவருக்கும் சுகாதாரத்திற்கு வகை செய்ய மருத்துவ கல்வி இன்றியமையாதது என்று மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

ரிஷிகேஷில் உள்ள எயிம்ஸ் மருத்துவ கல்வி நிறுவனத்தின் 5ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர் மருத்துவ கல்வி பட்டம் பெறும் மாணாக்கர் சமூகத்திற்கு வாழ்நாள் முழுவதும் சேவையாற்ற வாய்ப்பு கிட்டியுள்ளதாக எடுத்துரைத்தார்.

பட்டம் பெறும் அனைவருக்கும் இன்றைய தினம் இன்றியமையாதது என்றும் குறிப்பிட்டார்.

**************

**பணவீக்கம்**

நாட்டின் பண வீக்கம் சென்ற மாதத்தில் 2.05 சதவிகிதமாக குறைந்ததாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உணவு உற்பத்தி பொருட்கள் மின்சாரம், ஜவுளித்துறை உற்பத்தி பொருட்கள் அதிகரிப்பால் மார்ச் மாத பணவீக்கம் ஏற்புடையதாக இருந்ததாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதற்கு முந்தைய மாதம் இது 2.38 சதவிகிதமாக காணப்பட்டது.

அடிப்படை பொருட்களுக்கான வருடாந்திர பணவீக்க விகிதம் சென்ற மாதம் 0.76 சதவிகிதமாக குறைந்ததாகவும் அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது அதற்கு முந்தைய மாதம் 2.81 சதவிகிதமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

சென்றமாதம் எரிபொருள் மற்றும் மின் பிரிவுகள் ஏறுமுகமாக இருந்ததாகவும் அமைச்சகம் எடுத்துரைத்தது.

உற்பத்தி பொருட்கள் பிரிவில் சென்றமாதம் பணவீக்க விகிதம் 3.07 சதவிகிதமாக சற்று அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு முந்தைய மாதம் இது 2.86 சதவிகிதமாக காணப்பட்டது.

**********

**அமர்நாத்**

வரும் ஜுலை மாதம் 3ஆம் தேதி தொடங்க உள்ள 52 நாள் அமர்நாத் யாத்திரைக்கான பதிவுகள் நேற்று தொடங்கின.

பக்தர்கள் **jksasb.nic.in** என்ற இணையதளத்தில் பதிவு செய்துகொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் அங்கீகரிக்கப்பட்ட 540 வங்கி கிளைகள் மூலமும் பக்தர்கள் பதிவு செய்துகொள்ளலாம்.

அமர்நாத் யாத்திரை மேற்கொள்ள பதிவு மற்றும் மருத்துவ சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பதிவு கட்டணம் 220 ரூபாயாகும்.

ஜம்முகாஷ்மீரின் **பஹல்கம், பல்தால்** மார்க்கங்களிலிருந்து தொடங்கும் அமர்நாத் யாத்திரை வரும் ஆகஸ்ட் 9ஆம் தேதி ரக்ஷாபந்தன் தினத்துடன் முடிவடைகிறது.

**********

**ஹஜ்**

நாட்டின் ஹஜ் புனித பயணம் மேற்கொள்வோரின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளில் ஒரு லட்சத்து 75 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டு இது ஒரு லட்சத்து 36 ஆயிரமாக இருந்ததாக அமைச்சகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தாண்டு ஒரு லட்சத்து 22 ஆயிரம் யாத்திரிகர்கள் ஹஜ் பயணம் மேற்கொள்ள உள்ளனர்.

எஞ்சிய இடங்கள் தனியார் சுற்றுலா பிரிவினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபியா அரசின் நெறிமுறைகளுக்கு ஏற்ப விமான போக்குவரத்து, தங்கும் இடங்கள் உள்ளிட்ட அனைத்து சேவைகளுக்கான ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**********

**அமலாக்கத்துறை**

ஹரியானா மாநிலத்தில் நிலம் தொடர்பான முறைகேடுகள் குறித்து மூத்த காங்கிரஸ் தலைவர் திருமதி பிரியங்கா காந்தியின் கணவர் ராபர்ட் வத்ராவிடம் அமலாக்க இயக்குனரகம் இன்று விசாரணை மேற்கொண்டு வருகிறது.

குருகிராமில் திரு.ராபர்ட் வத்ராவிற்கு சொந்தமான நிறுவனத்திற்கு நிலம் வாங்கியது குறித்து அமலாக்கத்துறையினர் அவரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**********

**முதலமைச்சர் 110**

மாநிலங்களின் நியாயமான உரிமைகளை பாதுகாக்கவும், மத்திய மாநில அரசுகளுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்திடவும் உயர்நிலை குழு அமைப்பதற்கான தீர்மானத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்தார்.

சட்டப்பேரவையில் அவை விதி 110ன்கீழ் இன்று அறிக்கை தாக்கல் செய்து பேசிய அவர் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் இக்குழு ஏற்படுத்தப்படும் என்றார்.

இகுழுவின் இடைக்கால அறிக்கை வரும் ஜனவரி மாதத்திற்குள்ளும்,

இறுதி அறிக்கை இரண்டு ஆண்டுகளிலும் அரசிற்கு வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக முதலமைச்சர் கூறினார்.

இக்குழுவில் தமிழ்நாடு மாநில திட்டக்குழு முன்னாள் துணைத்தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன்,

கடல்சார் பல்கலைகழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. அசோக் வர்தன் ஷெட்டி ஆகியோர் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அனைத்து அதிகாரங்களை கொண்டதாக மாநில அரசுகள் விளங்கினால் மட்டுமே அடிப்படை வளர்ச்சிகளை அடைய முடியும் என்று முதலமைச்சர் குறிப்பிட்டார்.

கல்வியை மாநில பட்டியலுக்கு கொண்டு வரும் முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**********

**வெளிநடப்பு**

சட்டப்பேரவையில் இருந்து அஇஅதிமுக மற்றும் பிஜேபி உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்தனர்.

பேரவை விதி 110ன் கீழ் மாநில சுயாட்சி குறித்த தீர்மானத்தின் மீது முதலமைச்சர் பேச தொடங்குவதற்கு முன்பு எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி பேச முற்பட்டார்.

அதற்கு அவைத்தலைவர் அனுமதி மறுத்ததை தொடர்ந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

பின்னர் முதலமைச்சர் முன்மொழிந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பி.ஜேபி. சட்டமன்ற கட்சி தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் பேசிவிட்டு உறுப்பினர்களுடன் வெளிநடப்பு செய்தார்.

பின்னர் பேரவைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய திரு.நயினார் நாகேந்திரன் மாநில சுயாட்சியால் நாட்டின் வலு குறையும் என்று குறிப்பிட்டார்.

தேர்தலை முன்னிறுத்தியே இந்த தீர்மானத்தை அரசு கொண்டு வந்ததாக அவர் குறை கூறினார்.

**********

**சட்டப்பேரவை**

ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் இரண்டாம் கட்ட திட்டம் கட்டாயம் நிறைவேற்றப்படும் என்று, மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் சாலைகள் அமைக்க நடப்பாண்டு 3 ஆயிரத்து 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

விருதாச்சலம் பேருந்து நிலையத்தை 90 லட்ச ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள்**

**ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி** மேலப்பாளையத்தில் நான்குவழி சாலை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, மாநில பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு சட்டப்பேரவையில் கூறியிருக்கிறார்.

**காஞ்சிபுரத்தில் 7 புதிய துணை** மின்நிலையங்கள் அமைக்கப்படும் என்று, மாநில மின்சாரத்துறை அமைச்சர் திரு.செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

HIV தொற்றால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கான மாதந்திர உதவித்தொகை வழங்கும் திட்டம் விரைவில் தொடங்கப்படும் என்று, மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

**********

**அஇஅதிமுக**

அஇஅதிமுகவின் செயற்குழு கூட்டம் அடுத்த மாதம் 2ஆம் தேதி சென்னையில் நடைபெறும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கட்சியின் மாவட்ட மாநில செயலாளர்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அஇஅதிமுக - பிஜேபி கூட்டணி அமைந்த பின்னர் இந்த செயற்குழு கூட்டம் நடைபெறுவது முக்கியத்துவம் பெறுகிறது.

**********

**சிபிஐ**

கள்ளக்குறிச்சியில் விஷ சாராயம் அருந்தி உயிரிழந்தோர் தொடர்பான வழக்கு விசாரணை **மூன்று மாதங்களில்** முடிக்கப்படும் என்று சி.பி.ஐ சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

சென்ற ஆண்டு கருணாபுரத்தில் விஷ சாராயம் அருந்தி 67 பேர் மரணமடைந்த நிலையில், இதுதொடர்பாக 21 பேர் கைது செய்யப்பட்டு வழக்கை சி.பி.ஐ விசாரித்து வருகிறது.

இந்நிலையில் 10 மாதங்களுக்கு மேலாக சிறையில் உள்ளதால் ஜாமீன் வழங்க வேண்டும் என்று கோரி, கைது செய்யப்பட்டவர்கள் சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு விசாரணை 3 மாதங்களில் முடிக்கப்படும் என்றும் குற்றவாளிகளுக்கு ஜாமீன் வழங்க கூடாது என்றும் சி.பி.ஐ தரப்பு கேட்டுக்கொண்டதை அடுத்து வழக்கு விசாரணையில் எத்தனை பேர் உள்ளனர் என்பது தொடர்பாக சிபிஐ பதில் அளிக்க உத்தரவிட்டு வரும் 17ஆம் தேதிக்கு நீதிமன்றம் வழக்கை ஒத்திவைத்தது.

**********

**மீன்பிடி தடை காலம்**

தமிழ்நாட்டில் கிழக்கு கடற்கரை பகுதியில் மீன்பிடி தடைக்காலம் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்ததை அடுத்து தூத்துக்குடி ராமேஸ்வரம் உள்ளிட்ட மீன்பிடி துறைமுகங்களில் விசைபடகுகள் கரையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

மீனவர்கள் படகுகளை சீரமைப்பது, வலைகளை பராமரிப்பது உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

புதுச்சேரி யூனியன் பிரதேசம் கனகசெட்டிக்குளம் முதல் மூர்த்திகுப்பம் வரையிலும்,

காரைக்கால் பகுதியின் மண்டபத்தூர் முதல் வடக்கு வாஞ்சூர் வரையிலும் மீன்பிடிதடைக்காலம் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ளது.

மீன்களின் இனப்பெருக்க காலத்தை கருத்தில் கொண்டு இந்த 61 நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**********

**சமயபுரம்**

திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் சித்திரை தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்று வருகிறது.

ஏராளமான பக்தர்கள் விரதமிருந்து பால்குடம், அக்னிசட்டி ஏந்தி நேர்த்தி கடன்களை செலுத்தி வருவதாக இக்கோவிலின் சிவாச்சாரியார் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சார்பில் திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சிறப்பு பேருந்துகள் சமயபுரம் திருக்கோவிலுக்கு இயக்கப்பட்டு வருகின்றன.

தேரோட்டத்தை ஒட்டி மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளது.

**********

**கண்ணாடி இழைபாலம்**

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் இடையே அமைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழைப்பாலம் பராமாரிப்பு பணிகளுக்காக இன்றுமுதல் 5 நாட்களுக்கு மூடப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

*********

**இருவரி**

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் உங்களை தேடி** உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் நாளைமாலை உத்திரமேரூரில் பொதுமக்கள் வட்டாச்சியர் அலுவலகத்தில் மனுக்களை வழங்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் பெற்றோரை இழந்த** மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் தட்டப்பாறை மற்றும் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள அரசினர் இல்லங்களில் தங்கி கல்வி பயிலலாம் என்று ஆட்சித்தலைவர் திரு.கே.இளம்பகவத் கூறியுள்ளார்.

**விழுப்புரம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில்** தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

**பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை** தாலுக்காவில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் நாளை நடைபெறுகிறது.

**நாமக்கல் மாவட்ட பள்ளிகளில் செயல்படும்** சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 321 சமையல் உதவியாளர் பணியிடங்கள் தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்யப்பட உள்ளதால் தகுதியுடையோர் வரும் 28ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் டாக்டர் உமா கேட்டுக்கொண்டுள்ளார்.

**மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி** பரசலூர் ஊராட்சியில் அரசு மருத்துவமனையில் நடைபெற்ற ரத்ததான முகாமில் 500க்கும் மேற்பட்ட கிராம மக்கள் குருதி கொடை அளித்தனர்.

**********

**துப்பாக்கிசுடுதல்**

உலக கோப்பை இரண்டாம் கட்ட துப்பாக்கி சுடும் போட்டிகள் பெருவில் இன்று தொடங்குகின்றன.

ரைஃபில், பிஸ்டல், Shot gun பிரிவுகளில் இந்தியா சார்பில் **சவ்ரப் சவுத்ரி, ரவீந்தர்சிங், வருண் தோமர், ஆகாஷ் பரத்வாஜ்** உள்ளிட்ட 42 பேர் பங்கேற்கின்றனர்.

**********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் சண்டிகரில் இன்று இரவு ஏழரை மணிக்கு பஞ்சாப் கிங்ஸ் கொல்கத்தா நைட்ரைடர்ஸை எதிர்கொள்கிறது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

**********